புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 17, 2024 • புரட்சி 24 • முழக்கம் 41 • விலை ரூ.3.00

# கோல்வாக்கர்: இந்தியப் பாசிசத்தின் தந்தை!

இன்றைய இந்தியாவின் மிக முக்கிய அமைப்பு ஆர்.எஸ்.எஸ். இந்திய ஒன்றியத்தை அந்த அமைப்புதான் ஆட்சி செய்துகொண்டிருக்கிறது. வட இந்தியாவின் பல மாநிலங்களில் அதிகாரத்தில் உள்ளது. அதன் அரசியல் பிரிவான பா.ஜ.க மிகவும் சக்திவாய்ந்த, பணக்கார கட்சியாக உருவெடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து முக்கிய நிறுவனங்களும் ஆர்.எஸ்.எஸ் கட்டுப்பாட்டில் உள்ளன. பல்கலைக் கழகங்கள் முதல் அறிவியல், சமூக அறிவியல் மற்றும் கலாச்சாரம் தொடர்பான அனைத்து நிறுவனங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆர்.எஸ்.எஸ் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்போது இந்த அமைப்பு உலகின் பிற நாடுகளிலும் பல பெயர்களில் செயல்பட்டு வருகிறது. அது ஒரு தனித்த அமைப்பு மட்டுமல்ல, பல நூறு அமைப்புகளுக்கான அமைப்பு என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

ஒரு நூற்றாண்டில் எப்படி இத்தகைய நிலையை ஆர்.எஸ்.எஸ் அடைந்தது என்பதைத் தெரிந்துகொள்ள கோல்வாக்கரை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கான படைப்புதான் “*Golwalkar: The Myth Behind the Man, The Man Behind the Machine (Simon and Schuster; 2024)*” என்ற ஆங்கில நூல். திரேந்திர கே.ஜா என்பவர் இந்நூலை எழுதியிருக்கிறார். இவர் ஏற்கெனவே இந்திய வலதுசாரிகளின் வரலாறு, உருவாக்கம் குறித்தும், கோட்சேவின் வாழ்க்கை வரலாறு, நிழல் படைகள்: விளிம்புநிலை அமைப்புகள் மற்றும் இந்துத்துவாவின் அடிவருடிகள் உள்ளிட்ட கவனித்தக்க நூல்களைப் படைத்திருக்கிறார். அந்த வரிசையில் இந்நூலில் கோல்வாக்கரின் வரலாற்றின் ஊடாக இந்தியாவில் பாசிசம் பரப்பப்படும் வரலாற்றை விவரித்திருக்கிறார்.


## வெறுப்புப் பிரச்சாரத்துக்கு அடித்தளமிட்டவர்!

ஆர்.எஸ்.எஸ்-ஸின் இரண்டாவது தலைவர் என்பது மட்டுமே கோல்வாக்கரின் அடையாளம் அல்ல. அதை விட முக்கியத்துவமானது அவர் வன்முறை மற்றும் வெறுப்பு இயந்திரத்தை உருவாக்கியவர் என்பது. அந்த இயந்திரம் ஆர்.எஸ்.எஸ். ஹெட்கேவர்தான் ஆர்எஸ்எஸ்-ஐ உருவாக்கினார். ஆனால் நூற்றாண்டுக்கு பின்பும் வன்முறை, வெறுப்பை விதைக்கிற கருவியாக ஆர்எஸ்எஸ் இருப்பதற்குக் காரணமானவர் கோல்வாக்கர். அது எப்படி என்பதை விவரிக்கும் வகையில் அமைந்துள்ளது இந்நூல்.

மற்றவர்கள் (பிற மதத்தினர்) தங்களை இந்தியர்கள் என்று அழைத்துக் கொண்டு இந்தியர்களாக வாழவே இந்துக்களிடம் அனுமதி பெற வேண்டுமென்று மனநிலையில் ஆர்.எஸ்.எஸ் வார்க்கப்பட்டிருக்கிறது. இந்துக்களை மேம்படுத்துவதோ, இந்துக்களுக்குள் இருக்கும் பாகுபாடுகளைக் களைவதோ அல்லது இந்துக்களின் ஆன்மீகத்தைப் பற்றியோ ஒருபோதும் ஆர்.எஸ்.எஸ்-க்கு கவலை இருந்ததில்லை. இந்துக்களின் சமூக வாழ்வில் உள்ள படிநிலை ஒழுங்கைப் பற்றியும் அது கவலைப்படவில்லை. புரட்சியாளர் அம்பேத்கரைப் போல ஜாதியை ஒழிப்பது ஆர்.எஸ்.எஸ்-ஸின் நோக்கமாக இல்லை. குழந்தைத் திருமணங்களுக்கு எதிரான எந்த ஒரு விழிப்புணர்வுப் பணியையும் இதுவரை செய்ததில்லை. அது சதியின் தீமையை எதிர்த்துப் பேசவில்லை. கணவரை இழந்த பெண்களின் வாழ்வியல் உரிமைக்காக ஒருபோதும் பரப்புரை செய்யவில்லை. ஜாதிகளுக்கு இடையேயான திருமணங்களை ஊக்குவிக்க முயன்றதில்லை. வரதட்சணை முறை போன்ற இந்து சமூகத்தின் பிற தீமைகளை ஒழிப்பதற்காக ஆர்.எஸ்.எஸ் எந்த இயக்கத்தையும் நடத்தவில்லை.

மாறாக பிற மதத்தினரைக் கண்மூடித்தனமாக வெறுக்க வைக்கும் இந்துவை உருவாக்கும் கருவியாக ஆர்.எஸ்.எஸ் இருக்கிறது. இசுலாமியர்கள், கிறித்துவர்கள், பொதுவுடைமை சிந்தனையாளர்களைத் தங்களின் நிரந்தர எதிரிகள் என்று வரையறுக்கிறது. ஒட்டுமொத்தத்தில் வெறுப்பையும் வன்முறையையும் பரப்புகிற இயந்திரம் ஆர்.எஸ்.எஸ். இக்கொடூர இயந்திரத்தை இந்தியாவில் நிறுவமனமயப்படுத்தியவர் கோல்வாக்கர்.

ஆர்.எஸ்.எஸ்-ஸின் இந்துத்துவம் என்பது ஒரு மதவாத சிந்தனை என்ற எல்லையைக் கடந்து




இந்துத்துவ தேசியவாதமாக மாற்றப்பட்டதன் பின்னணியில்தான் கோல்வாக்கரின் பங்கு முக்கியமானது. “இந்த உலகிலேயே, ஏன் இந்த அண்டத்திலேயே சிறந்த படைப்பு இந்துக்கள். இந்து மதம்தான் உலகிலேயே மிகப் பழமையானது. இந்து மதத்திற்காகக் கடவுள் தேர்ந்தெடுத்த தேசம்தான் இந்தியா. அதனால் இந்துக்களுக்குத்தான் இந்தியாவில் எல்லா உரிமையும்” என்பதுதான் கோல்வாக்கர் வகுத்த இந்துத்துவ இந்தியாவுக்கான ஆர்.எஸ்.எஸ்-ஸின் கோட்பாடு. அதுதான் இன்றைக்கும் இந்துத்துவா கும்பலால் சிறுபான்மையினர் குறிவைத்து தாக்கப்படுவதற்கான உணர்வைக் கொடுக்கிறது. ஆக, ஆர்.எஸ்.எஸ்-ஸின் தற்போதைய வடிவம் கோல்வாக்கரால் கற்பனை செய்யப்பட்டது. கோல்வாக்கரின் இத்தகைய இந்துத்துவா சிந்தனைகளுக்காக சித்தாந்த குருவாக சாவர்க்கர் உள்ளார்.

## எதிர்கால இந்துராஷ்டிராவுக்கான புளூ பிரிண்டை உருவாக்கியவர்!

இந்திய வலதுசாரிகளைப் பற்றிய ஆய்வுக்கான முக்கிய ஆதாரமாகத் திகழும் இந்நூல், கோல்வாக்கரை ஏன் இந்தியப் பாசிசத்தின் தந்தையாக வரையறுக்கிறது என்ற கேள்வி எழலாம். “நாம் அல்லது நமது தேசம் வரையறுக்கப்பட்டது” என்ற கோல்வாக்கரின் உரை அதற்கான பதிலைத் தருகிறது. இந்து ராஷ்டிரா திட்டத்திற்கு சாவர்க்கர் கடந்த காலத்தை வரையறுத்த போது, கோல்வாக்கர் தான் எதிர்கால இந்துராஷ்டிராவிற்கான புளூ பிரிண்டை வரைந்தார். அத்தகைய ஆபத்துக்குரியதாகத்தான் அந்த உரை உள்ளது. அந்த உரையில் **கோல்வாக்கரின் சிந்தனை பாசிசத்தின் ஊடாக வெளிப்படுகிறது என்பதை விட நாசிசத்தின் ஊடாக வெளிப்படுகிறது** என்பதே பொருத்தமாக இருக்கும்.

நாஜிக்களின் வழியில் இந்தியாவில் இந்துக்கள் இசுலாமியர்களை எதிர்கொள்ள வேண்டுமென்பதே அவ்வுரையின் மையப்புள்ளி. சுயவெறி, சந்தேகம், பொய்யை அடிப்படையாகக் கொண்ட ஒரு நபராகவே நூல் முழுக்க அடையாளப்படுகிறார் கோல்வாக்கர். வெறுப்பைப் பரப்புவதும் தன்னைப் பற்றிய பொய்யான பிம்பங்களைத் திட்டமிட்டு கட்டமைப்பதையும் தொழிலாகக் கொண்டு செய்திருக்கிறார் கோல்வாக்கர். அவர் ஒரு பேராசிரியர் என்று இந்துத்துவவாதிகள் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்கள். தன்னைப் பற்றிய ஒரு நல்ல பிம்பத்தை ஏற்படுத்திக்கொள்ள கோல்வாக்கர் பரப்பிய மிகப்பெரிய முதல் பொய் அதுதான்.

## காந்தியை எச்சரித்த கோல்வாக்கர்!

உண்மையில் அவர் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் செய்முறை விளக்குநராக (demonstrator) மட்டுமே இருந்துள்ளார். அதேபோன்று, பிற்காலத்தில் அவரது சொந்தப் புத்தகமான ‘நாம் அல்லது நமது தேசம் வரையறுக்கப்பட்டது’ என்பது குறித்தும் பொய் பிரச்சாரம் செய்யப்பட்டது. அந்தப் புத்தகம் கோல்வாக்கரால் எழுதப்பட்டது, ஆனால் அதன் காரணமாக அவரே ஆபத்தில் சிக்கியபோது, இது தனது சொந்த புத்தகம் அல்ல, மொழிபெயர்ப்பு என்று சொல்ல ஆரம்பித்தார். அந்த வழியில் வந்ததால்தான் காந்தியடிகளைக் கொலை செய்த நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ்-ஐ சேர்ந்தவர் என்பதை இன்றளவிலும் ஒப்புக்கொள்ள சங்கிகள் மறுக்கிறார்கள்.

காந்தியின் மீது ஆர்.எஸ்.எஸ்-ஸுக்கு இருக்கும் கோபம் எத்தகையது என்பதற்கு கோல்வாக்கரே மிக முக்கிய சாட்சி. 1947 டிசம்பரில், டெல்லியின் ரோஹ்தக் சாலையில் நடைபெற்ற கூட்டத்தில், இசுலாமியர்களை இந்தியாவில் வைத்திருக்க வேண்டும் என்ற தனது பிடிவாதத்தைக் காந்தி தொடர்ந்தால், அவர் அமைதியாக்கப் படலாம் என்று கோல்வாக்கர் மிரட்டினார். அடுத்த மூன்றாவது வாரத்தில் கோட்சேவால் காந்தி படுகொலை செய்யப்பட்டார். ஆனால் காந்தி கொல்லப்பட்ட பிறகு, ஆர்.எஸ்.எஸ்-ஸும் கோல்வாக்கரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டனர். தங்களைக் காப்பாற்றிக் கொள்ள 13 நாள் துக்கம் அறிவித்தனர். கோல்வாக்கரின் பேச்சால் உந்தப்பட்டுத்தான் கோட்சே காந்தியைக் கொன்றாரா என்ற கேள்வியை இந்நூல் எழுப்புகிறது.

வல்லபாய் படேல் அல்லது கோவிந்த் வல்லப பந்த் போன்றோர் ஆர்.எஸ்.எஸ். ஸுடன் காட்டிய நெருக்கம், இசுலாமியர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைகளின்போது இவர்கள் எடுத்த மோசமான நிலைப்பாடுகள் என ஆர்.எஸ்.எஸ்-ஸின் மதவாத அரசியலின் அருவருப்பான வரலாற்றை, கோல்வாக்கரின் வரலாற்றின் ஊடாக ஆழமாக எடுத்துரைக்கிறார் ஆசிரியர் ஜா. ஒட்டுமொத்தத்தில் பாஜகவின் பாசிச ஆட்சிக்கான கருத்தியல், கோல்வாக்கர் விதைத்த நஞ்சில் இருந்து எழுகிறது என்பதை இந்நூலை வாசிக்கும் எவரும் எளிமையாகப் புரிந்துகொள்ளலாம்.

## “ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்”




நூற்றாண்டைத் தொடங்கி இருக்கிற ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதன் கரங்களுக்கு எட்டாக்கனியாக இருந்த தமிழ் மண்ணில் இன்று தடியோடு ஊர்வலம் போகும் அளவிற்கு வந்திருக்கிறது.

ஒரு நூறாண்டு கால சமூகநீதி கொள்கைகளுக்கான போராட்ட வரலாறு கொண்ட திராவிட நிலத்தில் தன் விதையினை ஊன்றிவிட ஆர்.எஸ்.எஸ். மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இதனை ஒரு தொடக்கப்புள்ளியாகவே பார்க்க வேண்டி உள்ளது. முழுக்க முழுக்க சித்பவன பார்ப்பனர்களைத் தலைமையாகக் கொண்ட ஓர் இயக்கம் மதத்தின் பெயரைச்சொல்லி மக்களைப் பிளவுபடுத்த மட்டும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்து இளைஞர்களைப் பயன்படுத்திக் கொள்கிறது.


ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்ட பின்னணி மற்றும் வரலாறு, ஒட்டு மொத்த இந்தியாவும் விடுலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது அவர்களது செயல்பாடு என்னவாக இருந்தது? அந்த அமைப்பின் தலைமை எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறது? காந்தியின் கொலை வழக்கில் அவர்களின் பங்கு, வரலாறு முழுக்கவே முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் என ஆர்.எஸ்.எஸ்-ஸைப் பற்றிய முழுமையான தகவல்களைத் தரும் நூல்.

அனைத்துத் தகவல்களையும் ஆதாரங்களோடு அம்பலப்படுத்திய இந்நூல் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களால் எழுதப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருந்தாலும் இன்றைய தலைமுறைக்கு அறியாத பல செய்திகளைத் தரும் நூலை மலிவு விலையில் நன்செய் பதிப்பகம் வெளியிடுகிறது.

விலை - ரூ.50/- - பேச: 9566331195

### தலையங்கம்

# நூற்றாண்டு காணும் ஜாதி ஒழிப்புப் போராளி



ஜாதி ஒழிப்புக் களத்தில் உயிர்நீத்த மாவீரன் இமானுவேல் சேகரன் நூற்றாண்டு இது. தென் தமிழ்நாட்டில் தலைவிரித்தாடிய ஜாதிவெறிக்கு எதிராக மக்களைத் திரட்டி போராடிய மாவீரன். 1924, அக்டோபர் 09ஆம் தேதி முதுகுளத்தூர் அருகே உள்ள செல்லூரில் அவர் பிறந்தார். இராணுவத்தில் சேர்ந்தார். விடுமுறைக் காலங்களில் ஊருக்கு வரும் போது ஒடுக்கப்பட்ட மக்களின் ஜாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடினார். மக்களை அணிதிரட்டினார். ஒருகட்டத்தில் இராணுவத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஜாதி ஒழிப்புக் களத்தில் தன்னை முழுமையாக அர்பணித்துக்கொண்டார். தேவேந்திர குல வேளாளர் என்ற ஜாதிப் பிரிவில் அவர் பிறந்தாலும் சுயஜாதியைக் கடந்து தீண்டாமையால் பாதிக்கப்பட்ட நாடார் உள்ளிட்ட அனைத்து ஜாதிகளையும் அவர் ஒருங்கிணைத்தார். 1953இல் ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தை அவர் தொடங்கினார். ஜாதி ஒழிப்புடன் பெண்ணுரிமைக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்தார். கணவனை இழந்தப் பெண்கள் மறுமணம் செய்ய வேண்டும் என்பதை மக்களிடம் நேரடியாகச் சென்று பரப்புரை செய்தார். அன்றைய காலகட்டத்தில் இராஜகோபாலாச்சாரி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து தந்தை பெரியார் போராட்டக் களத்தில் இறங்கினார். அதே கால கட்டத்தில் தென் மாவட்டங்களில் குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியவர் இமானுவேல் சேகரன்.

கிராமங்களில் உள்ள தேனீர் கடைகளில் நிலவிய இரட்டைக் குவளை முறையை எதிர்த்து இரட்டைக் குவளை உடைக்கும் போராட்டத்தை அவர் நடத்தினார். அதே வழியில் பெரியார் திராவிடர் கழகம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு தழுவிய இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தை நடத்தியதையும் இங்கே நினைவுகூற வேண்டும். 1954இல் இரட்டைக் குவளை எதிர்ப்பு மாநாட்டை அருப்புக்கோட்டையில் அவர் நடத்தினார். தனது கணவர் பெரியார் கொள்கையில் ஈடுபாடுக் கொண்டவர். மிகச்சிறந்த பகுத்தறிவாளர் என்று அவரது மறைவுக்குப் பிறகு அவரது துணைவியார் அளித்தப் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராமநாதபுர மாவட்ட ஆதிக்க ஜாதியினர் ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைகளாக நடத்தினார்கள். ஜாதித் திமிரோடு 1919லும், பிறகு 1930லும் தீர்மானங்களாக இதை அறிவித்தார்கள். இதை எதிர்த்து 1930இல் அமராவதி புதூரில் ‘சட்டைக் கட்சி’ என்ற பெயரில் ‘சட்டை போடும் உரிமை’ மாநாடு ஒன்று நடந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் காலில் செருப்பு அணியக் கூடாது, தோளில் துண்டு அணியக்கூடாது, முழங்காலுக்குக் கீழே வேட்டிக் கட்டக் கூடாது, குடை பிடிக்கக் கூடாது, பள்ளிக்கூடங்களுக்குப் போகக் கூடாது, ஆண்டைகளின் ஆடு, மாடுகளை மேய்க்க வேண்டும் என்ற அடிமைக் கட்டளைகளை அவர்கள் திணித்தார்கள். இதுவே கிராமப் பண்பாடு என்று அச்சுறுத்தினார்கள். இதை எதிர்த்துப் போராடினார் இமானுவேல் சேகரன்.

1946, டிசம்பர் 26ஆம் நாள் மதுரை விக்டோரியா அரங்கில் அம்பேத்கர் உரையாற்றுவதற்கு வருகை தந்த போது இமானுவேல் அவரைச் சந்தித்து ஜாதிய ஒடுக்குமுறைகளைப் பகிர்ந்து கொண்டார். கிராமம் கிராமமாக மக்களிடம் சென்று விழிப்புணர்வு பரப்புரைகளை அவர் மேற்கொண்டார்.

ஃபார்வேடு பிளாக் கட்சித் தலைவர் முத்துராமலிங்கத் தேவர், மிகுந்த செல்வாக்கோடு அப்பகுதியில் வலம்வந்துகொண்டிருந்தார். அவரது ஃபார்வேடு பிளாக் கட்சிக்கு எதிராகக் காங்கிரஸ் கட்சி இருந்தது. ஃபார்வேடு பிளாக் கட்சித் திணித்த ஜாதிய அடக்குமுறைகளுக்கு எதிராகக் காங்கிரஸ் கட்சி இமானுவேலைத் தனது கட்சிக்குள் இணைத்துக் கொண்டது. 1954இல் அவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். காங்கிரசில் இணைந்த பிறகும் தேவேந்திரர் அரசியல் மாநாட்டை முதுகுளத்தூரில் நடத்தி ஜாதி ஆதிக்க சக்திகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். 1956, டிசம்பர் 6ஆம் தேதி அம்பேத்கர் மறைவுக்கு வீரவணக்கம் செலுத்த பெருவாரியான மக்களைத் திரட்டினார் இமானுவேல் சேகரன். ஜாதி ஆதிக்கத்துக்கு கடும் நெருக்கடிகளை அவர் உருவாக்கினார்.

1957இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தனித் தொகுதியில் இமானுவேலை வேட்பாளராக நிறுத்த காங்கிரஸ் திட்டமிட்டது. அதற்காகக் கிருஸ்துவத்தில் இருந்து விலகி இந்து மதத்திற்கு மாறி, இமானுவேல் என்ற தனது பெயருடன் சேகரன் என்பதை இணைத்துக் கொண்டார். ஆனாலும் அந்தத் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. முத்துராமலிங்கத் தேவர் கைகாட்டும் வேட்பாளரே வெற்றி பெறுவார் என்ற நிலை நீடித்திருந்தது. இதை எதிர்த்து இமானுவேல் சவால் விட்டார். 1957இல் முதுகுளத்தூர் தனித் தொகுதியில் நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலில் தன்னுடைய தலித் வேட்பாளரை நிறுத்தி முத்துராமலிங்கத் தேவர் நிறுத்திய தலித் வேட்பாளரைத் தோற்கடித்தார். ஜாதி ஆதிக்க வெறி தலைத்தூக்கியது. பெரும் கலவரம் வெடித்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் சி.வி. ஆர்.பணிக்கர், 1957 செப்டம்பர் 10இல் சமாதானக் கூட்டத்தைக் கூட்டினார். தேவர்கள் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் உள்ளிட்டோரும், ஜாதி அமைப்புகள் சார்பில் இமானுவேல் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். ஒரு கட்டத்தில் இமானுவேல் சேகரனுக்கும், முத்துராமலிங்கத் தேவருக்கும் கடும் வாக்குவாதம் நடைபெற்றது. மறுநாள் செப்டம்பர் 11ஆம் தேதி, தனது வீட்டின் அருகே இருந்த பெட்டிக்கடை முன்பு ஜாதிவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது 32. படுகொலையைத் தொடர்ந்து முதுகுளத்தூர் பற்றி எரிந்தது. இரு தரப்பிலும் மரணங்கள் – துப்பாக்கிச்சூடுகள் நடந்தன. இதுகுறித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் உள்துறை அமைச்சர் பக்தவத்சலம் விரிவான அறிக்கையை அரசு சார்பில் தாக்கல் செய்தார். (1957, அக்டோபர் 21) தனக்குச் சரிசமமாக இமானுவேல் பங்கேற்றுப் பேசியதையும், விவாதம் செய்ததையும் முத்துராமலிங்கத் தேவர் விரும்பவில்லை. அதுவே கலவரத்துக்குக் காரணமாயிற்று என்று அரசின் அறிக்கை கூறியது.

முதுகுளத்தூர் கலவரம் தமிழ்நாட்டு அரசியலில் புயலைக் கிளப்பியது. அப்போது பெரியார் ஒருவர் மட்டும் தான் முத்துராமலிங்கத் தேவருக்கு எதிராக, இமானுவேல் சேகரனுக்கு ஆதரவுக்கரம் நீட்டினார். இது குறித்து ‘முதுகுளத்தூர் கலவரம்’ வரலாற்றை எழுதிய பத்திரிகையாளர் தினகரன், தனது நூலில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

“இன்று மட்டுமல்ல முதுகுளத்தூர் கலவரம் காலம் முதல் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்கு வெளிப்படையான – உறுதியான ஆதரவை எந்தவொரு அரசியல் கட்சியும் தந்தது இல்லை. தங்களது வாக்கு வங்கிக்காக ஒடுக்கப்பட்ட மக்களைப் பயன்படுத்தும் நோக்கில் மட்டுமே அரசியல் கட்சிகளும், வலதுசாரி – இடதுசாரி கட்சிகளும் பாசாங்கு செய்துவருகின்றனர். விதிவிலக்காக திராவிடர் கழகமும், விடுதலை நாளேடும் மட்டுமே அன்றைய சூழலில் ஆதரவு தளத்தில் செயல்பட்டன” என்று பதிவு செய்துள்ளார் தினகரன். அதுமட்டுமின்றி விடுதலை நாளேடு அப்போராட்டக் களத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இமானுவேல் சேகரனை ஆதரித்தும், முத்துராமலிங்கத் தேவரை எதிர்த்தும் வெளியிட்ட செய்திகளையும் – தலையங்கங்களையும் நூலில் இணைப்பாக பிரதி எடுத்து வெளியிட்டுள்ளார் (தினகரன் சுயஜாதி மறுத்து ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்றார். அதனால் சொந்த மறவர் ஜாதியினாராலேயே அவர் படுகொலை செய்யப்பட்டார்) முதுகுளத்தூர் கலவரம் பற்றிப் பேராசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஒரு நூலை எழுதியுள்ளார். காந்தியத்தில் தீவிரப் பற்று கொண்ட டி.எஸ்.சொக்கலிங்கம், தமிழ்நாடு – மணிக்கொடி இதழ்களில் பணியாற்றியதோடு தினமணி இதழில் முதல் ஆசிரியராகவும் இருந்தவர். அவரும் முதுகுளத்தூர் கலவரத்தில் பெரியாரின் குரல் மட்டுமே தனித்து ஒலித்தது என்று பதிவு செய்திருக்கிறார். அந்த நூலில் பின் இணைப்பாக கலவர நாட்களில் விடுதலையில் வந்த செய்திகளை அப்படியே பிரதி எடுத்து 100 பக்கங்களில் அதை வெளியிட்டு இருக்கிறார். பெரியார் 1957, நவம்பர் 26இல் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரிக்கும் போராட்டத்திற்கு வித்திட்டதே முதுகுளத்தூர் கலவரம் தான். இதை விடுதலை ஏடே பதிவு செய்திருக்கிறது. 11.11.1957இல் வெளிவந்த விடுதலை தலையங்கம் வேறு பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். 33 வயதில் ஜாதி ஒழிப்புக் களத்தில் வீரமரணத்தைத் தழுவிய இமானுவேல் ஊட்டிய அந்த உணர்வை இளைய தலைமுறை நெஞ்சில் ஏந்த வேண்டும். சுயஜாதி உணர்வுகளைக் கடந்து ஜாதி ஒழிப்பு இயக்கத்தை முன்னெடுப்பதுதான் இமானுவேல் சேகரனுக்கு நாம் செலுத்தும் வீரவணக்கம்.

## முடிவெய்தினார் மக்கள் உரிமைப் போராளி ஜி.என்.சாய்பாபா



*மக்கள் உரிமைப் போராளி ஜி.என். சாய்பாபா முடிவெய்தினார். அவரது உடலில் 90 சதவீத உறுப்புகள் செயலிழந்தவை. சக்கர நாற்காலியிலேயே அவரது வாழ்க்கை நகர்ந்தது. மாவோயிஸ்ட் நூல்களை தனது வீட்டில் வைத்திருந்தார் என்பதற்காக ஆந்திரா மற்றும் மகாராஷ்டிரா காவல்துறை இணைந்து அவரை உஃபா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தது.*

*3592 நாட்கள் சிறையில் கழித்தார். அவர் செய்த குற்றமே மாவோயிசம் சம்பந்தப்பட்ட நூல்களை தனது அறையில் வைத்திருந்தார் என்பது தான். அந்த நூல்களை ரகசியமாக சுற்றுக்கு அனுப்பி நாட்டை உடைப்பதற்கு சதி செய்தார் என்று கூறி அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. 3592 நாட்கள் சிறைவாசத்துக்கு பிறகு அவரிடம் அப்படி நூல்கள் கைப்பற்றுவதற்கான ஆதாரமே இல்லை என கூறி உச்சநீதிமன்றம் அவரை கடந்த 7 மாதங்களுக்கு முன்பு விடுதலை செய்தது.*

*சிறைக்குசென்றபின் கடுமையான நோய் உபாதைகளுக்கு உள்ளானார். எந்தவித மருத்துவ வசதிகளும் இல்லாத நாக்பூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். கழிவறைக்கு போகும் போது கூட யாரோ ஒருவர் அவரை தூக்கி வைத்து உட்கார வைக்கும் அவல நிலை தான் இருந்தது. தனிமைச் சிறையில் இருந்ததால் மனநலம் பாதிப்பிற்குள்ளானார்.*

*அவருடைய அரசியல் வாழ்க்கையே இட ஒதுக்கீட்டுக்காகத்தான் தொடங்கியது. ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள அமலாபுரம் என்ற ஊரில் பிறந்த அவர், ஆந்திர பல்கலைக்கழகத்தில் படிக்கும் பொழுது மண்டல் பரிந்துரைகளை ஆதரித்து மாணவர் இயக்கத்தின் சார்பாக போராட்டத்தில் ஈடுபட்டார். தொடர்ச்சியாக இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவான சமூகநீதிப் போராட்டங்களை முன்னெடுத்தார். சிறை கைதிகள் - ஆதிவாசிகளின் உரிமைகளுக்காகவும், தனித் தெலுங்கானாவுக்கான போராட்டங்களையும் தொடர்ச்சியாக நடத்திவந்தார். டெல்லி பல்கலையில் பேராசிரியாக இருந்த போதுதான் இந்த கைது நடவடிக்கை நிகழ்ந்தது.*

*கடந்த 7 மாதங்களுக்கு முன்பு பித்தப்பை அறுவை சிகிச்சை மேற்கொண்ட அவருக்கு சில சிக்கல்கள் எழுந்த போது மீண்டும் மருத்துவமனைக்கு சென்றார். ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற அதிர்ச்சி தகவல் வந்தது. எந்தனையோ போராளிகள் மக்களுக்காக போராடி ஊடக வெளிச்சத்துக்கு வராதவர்களாக தங்களை மிகப்பெரிய தியாகத்திற்கு அர்பணித்துள்ளனர்.*

*மாவோயிசம் என்பது ஒரு தத்துவம், அந்த தத்துவத்தை படிப்பது ஒரு குற்றமா? இது குற்றம் என்றால்? கீதை என்ன சொல்கிறது? சண்டை போடு! போராடு! எதிரில் நிற்பவன் உறவினர் என்று பார்க்காதே, அவனை கொலை செய். கொலை செய்வது பாவமல்ல, ஆத்மா அழியாது என்றெல்லாம் கொலையை தூண்டுகிற, போரை தூண்டுகிற ஒரு இலக்கியத்தை வீட்டில் வைத்து வணங்குவது புனிதம். ஆனால் மாவோயிசம் என்ற தத்துவத்தை படிப்பது மட்டும் தேச துரோகமா? தேச துரோகி என்று குற்றம் சாட்டப்பட்ட சய்பாபவை விட உண்மையான தேச பக்தர்கள் வேறு எவரும் இருக்க முடியாது. அந்த போராளிக்கு நமது புகழ் வணக்கத்தை செலுத்துவோம்.*

## திராவிட இயக்க இதழ்கள் - புரட்சிப் பெரியார் முழக்கம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இதழ் புரட்சிப் பெரியார் முழக்கம்.

இது திராவிடர் விடுதலைக் கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளியாகி வருகிறது. 1997-ஆம் ஆண்டின் முதல் 2001-ஆம் ஆண்டின் இறுதிவரை மாத இதழாக வெளிவந்து கொண்டிருந்த இது, 2002-ஆம் ஆண்டு முதல் வார ஏடாக வெளிவரத் தொடங்கியது.

தற்போது அது மின்னிதழாகவும் வெளிவருகிறது. முந்தைய இதழ்களும் மின்னிதழ்களாக மாற்றப்பட்டு, அவை திராவிடர் விடுதலைக் கழகத்தின் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பெரும்பாலும் அரசியல் கட்டுரைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவருகிறது. அவற்றில் பெரும்பாலான கட்டுரைகளை இதழின் ஆசிரியரே படைக்கிறார்.

கட்டுரைகள் தவிர, வினா விடை - துணுக்குப் பத்திகள் - தலையங்கம் - ஆசிரியரது பொது நிகழ்ச்சி உரைகள் ஆகியவையும் இடம்பெற்றுவருகின்றன.

நன்றி : முரசொலி - 15.10.2024 இதழ்

# ஆதாரங்களுடன் விடுதலை இராசேந்திரன் பேச்சு (2)

# கொள்கைகளைக் கொண்டு செல்வதற்கு அடக்குமுறைகளை வரவேற்றார் பெரியார்!

**குடிஅரசு சமூகத்தில் உருவாக்கிய தாக்கத்தையும், மதவாதிகள் மிரண்டு போய் அரசிடம் பாதுகாப்பு கேட்ட வரலாறுகளையும் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சுட்டிக்காட்டினார்.**

**சென்னைக் கழகத் தலைமையகத்தில் ஆகஸ்டு 12ஆம் தேதி நடந்த குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகத் திறப்பு விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்..**

வள்ளலார் விழா ஒன்றில் பேசிய கலைஞர், வள்ளலார் சாமிகளைப் போல மென்மையான கருத்துகளை எல்லாம் சொல்லி இந்த மக்களைத் திருத்த முடியாது. இந்தத் தமிழன் கும்பகர்ணனாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். தூங்கிக் கொண்டிருக்கிற இந்தக் கும்பகர்ணன் விழிப்பதற்குப் பெரியார் என்ற யானை மிதித்தால் தான் நடக்கும் என்று பேசினார்.

சுயமரியாதைக்காரர்கள் தேவஸ்தானக் கமிட்டியில் இருக்கலாமா? என்ற கேள்விக்குப் பெரியார் இப்படி பதிலளித்தார். சுயமரியாதைக்காரர்கள் தேவஸ்தானக் கமிட்டியில் தாராளமாக இருக்கலாம். கோயில் சொத்துக்களை மக்களுக்கு பயன்படுத்துகிற முயற்சியில் நீங்கள் பங்களிக்கலாம். ஆனால் வெறும் மூடநம்பிக்கைகளையும், வர்ணாசிரமத்தை மட்டும் பரப்புவதற்காக மட்டும் அந்தக் கமிட்டி இருக்கிறது என்று சொன்னால் அதில் இருப்பதற்கான தேவையில்லை என்கிறார்.

குடிஅரசின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தி இரண்டு உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை இந்தியாவில் முதல்முறையாக தமிழில் மொழி பெயர்த்தது பெரியாரின் குடிஅரசு பத்திரிகை தான். அந்த நூலின் முன்னுரையில் பெரியார், மேலை நாடுகளில் ஏழை பணக்காரன் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் நம் நாட்டில் மேல் ஜாதி - கீழ் ஜாதி என்ற வேறுபாடு இருக்கிறது. இது கூடுதலாகவும் முதன்மையானதாகவும் இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டுதான் இந்த அறிக்கையை நாங்கள் வெளியிடுகிறோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டார்.

அதன்பின்னர் பெரியார் ரஷ்யாவுக்கு சென்றுவந்த பிற்பாடு சமதர்ம இயக்கம் என்ற பெயரில் பெரியாரே ஒரு அரசியல் கட்சியைத் தொடங்குகிறார். நாடு முழுவதும் இருந்து சமதர்மிகள் வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் சமதர்ம இயக்கம் வளர்கிறது. சமதர்ம இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுகிறார்கள். இப்படி அபரிமிதமான வளர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத பிரிட்டிஷ் அரசு சமதர்மக் கட்சியைக் கண்காணிக்கத் தொடங்கியது.

அப்போது பெரியாரின் கடிதங்களைப் பிரித்துப் பார்ப்பது, உளவுத்துறையின் மூலம் கண்காணிப்பது உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பெரியாருக்குத் தடையாக இருந்தனர். அதனால் சுயமரியாதை இயக்கத்தையே தடை செய்யக் கூடிய ஒரு நிலை உருவாகியது. எனவே சமதர்மத்தில் எனக்கு நம்பிக்கை இருந்தாலும் கூட, சுயமரியாதை இயக்கத்தின் பிரச்சாரம் முதன்மையானது என்று நினைக்கிறேன். அப்படிச் சுயமரியாதை இயக்கத்தைத் தடை செய்துவிட்டார்கள் என்று சொன்னால் நான் தடையை மீறிச் செயல்பட்டு சிறையில் அமர்ந்து கொண்டு ஒரு வீரனாக வாழ முடியும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு வீர சொர்க்கத்தை அடைய நான் தயாராக இல்லை. நான் சுயமரியாதை இயக்கத்தை நடத்த வேண்டும் என்று விரும்புகிறேன். அதனால் சமதர்ம பிரச்சாரத்தை ஒதுக்கி வைத்துவிட்டு சுயமரியாதை இயக்கத்தை நான் தொடர்கிறேன் என்று பெரியார்



சொன்னார்.

அதற்காக ஜீவானந்தம், வல்லத்தரசு, சிங்காரவேலர் போன்ற தலைவர்கள் எல்லாம் பெரியாரை விட்டு வெளியேறித் தனியாக ஒரு அமைப்பை உருவாக்கிய சில மாதங்களிலேயே காங்கிரஸ் கட்சியின் உட்பிரிவான காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் கரைந்தார்கள்.

அப்போது திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் ஜீவானந்தம், பெரியாரை வைத்துக்கொண்டே பெரியார் மீது விமர்சனங்களை முன்வைத்தார். அதன் பின்னர் பெரியார் பேசுகையில், நான் ஏன் இந்த நிலைப்பாட்டை எடுத்தேன் என்று விளக்கினார்.

**எந்த விசயத்துக்கும் கொள்கைகள் மட்டும் போதாது. கொள்கைகளுடன் அனுபவ ஞானமும் இருந்தால் தான் அதை மனிதத் தன்மை என்று சொல்ல முடியும். மற்றபடி அனுபவ சாத்தியத்திற்கு இணங்காத கொள்கைகள் நடைமுறைக்கு மக்களிடம் கொண்டு செல்வதற்கு தடையேற்படுத்தக் கூடிய எதுவானாலும் அதைப் புஸ்தக பூச்சு என்றுதான் சொல்ல வேண்டும். அல்லது வெறும் கருத்தைத் தெரிவிக்கும் சிந்தனையாளர்களே செயல்பாட்டுக்கு உரியவர்கள் அல்ல.**

நாகப்பட்டினத்தில் நடைப்பெற்ற ஒரு கூட்டத்திற்கு போகும் வழியில் சுவர்களில் விபச்சாரி நாகம்மை ஒழிக! பெரியார் என்ற கழுதை ஒழிக! சுவற்றில் எழுதியிருந்ததைப் பெரியார் பார்த்தார். பின்னர் கூட்டத்தில் பெரியார் பேசுகையில், சுவரில் எழுதியிருந்ததைப் பார்த்தேன். நாகம்மை என்ற விபச்சாரி ஒழிக என்று கேட்கிறான். நாகம்மை விபச்சாரியா? பத்தினியா? என்பது எனக்குத் தெரியாது. வேண்டுமானால் நாகம்மையிடம் கேட்டுத்தெரிந்துகொள்ளுங்கள், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை என்று தெரிவித்துவிட்டார்.

இரண்டாவதாக நீ தாழ்த்தப்பட்ட பெண் ஒருவருக்கு உன் பிள்ளையைக் கட்டிக் கொடுப்பியா? என்ற கேள்வியைப் பெரியாரிடம் கேட்டனர். அதற்குப் பெரியார், இதை என்னிடம் கேட்கக் கூடாது, என் மகன், மகளிடம் தான் கேட்க வேண்டும் என்று பதிலளித்தார். யாரைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் முடிவு செய்ய வேண்டும். அதை என்னிடம் கேட்க வேண்டாம் என்று பெரியார் பதிலளித்தார்.

அதே கூட்டத்தில் பேசும் போது ஒன்றைச் சொல்கிறார். என்னை யாரும் ‘மகாத்மா’வாக்கிவிடாதீர்கள். நான் தெய்வத் தன்மை பொருந்தியவராகப் பார்க்கப்பட்டால் மக்கள் என் கருத்தை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். நான் அயோக்கியன் என்று சொல்லப்பட்டால் என் வார்த்தைகள் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படும் என்று சொன்னார்.

சுயமரியாதை இயக்கத்தில் இருப்பவர்கள் கடவுள் மறுப்பாளர்களாக இருக்க வேண்டிய தேவையில்லை. ஆனால் மூடநம்பிக்கையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதக் கருத்துக்களை எதிர்ப்பவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்தினார். அதைப்போலவே மத எதிர்ப்பைச் சுயமரியாதைக்காரர்கள் எப்படிக் கையாள வேண்டும் என்பதைப் பெரியார் மிக நுட்பமாக விளக்குகிறார். தலித் மக்களிடம் சென்று உன்னைப் பஞ்சமனாக வைத்திருப்பது இந்துமதம், இந்துக் கடவுள் தான் என்றும், சாதாரணக் கடவுளை வணங்குகிற தலித்திடம் சென்று, **“ஏன்டா மடையனே உன்னால் சாமி கும்பிடாமல் இருக்க தைரியம் இல்லை. உனக்கு நான் யோசனை சொல்ல மாட்டேன். நீ சாமி கும்பிடாமல் இருந்துட்டு வா. அந்தத் துணிச்சல் இல்லாத உனக்கு நான் ஏன் யோசனை சொல்ல வேண்டும். இப்படித் தீண்டத்தகாதவனாகவே கடைசி வரை இருந்து செத்துப்போ”** என்று ஒரு சுயமரியாதைக்காரனால் பேச முடியாது. பேசவும் கூடாது என்கிறார். மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அதிலிருந்து அவர்களை வெளிக்கொண்டு வருவதற்காக அவர்களுடைய நிலையில் இருந்து கீழே இறங்கித்தான் பேச வேண்டும்.

எந்த விசயத்துக்கும் கொள்கைகள் மட்டும் போதாது. கொள்கைகளுடன் அனுபவ ஞானமும் இருந்தால் தான் அதை மனிதத் தன்மை என்று சொல்ல முடியும். மற்றபடி அனுபவ சாத்தியத்திற்கு இணங்காத கொள்கைகள் நடைமுறைக்கு மக்களிடம் கொண்டு செல்வதற்கு தடையேற்படுத்தக் கூடிய எதுவானாலும் அதை புஸ்தகப் பூச்சு என்றுதான் சொல்ல வேண்டும். அல்லது வெறும் கருத்தைத் தெரிவிக்கும் சிந்தனையாளர்களே ஒழிய செயல்பாட்டுக்கு உரியவர்கள் அல்ல என்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியில் மூல உத்தி, செயல் உத்தி என்று சொல்வார்கள். ஆனால் அதையெல்லாம் பெரியார் படிக்கவில்லை, மக்களிடம் சென்று தனது அனுபவங்களின் வழியாகவே தொடர்ந்து பேசிவந்தார்.

ஒருமுறை பச்சையப்பன் கல்லூரியில் தமிழைப் பற்றிப் பேசுகிறார். பெரியார் படித்ததோ வெறும் 4வது தான். ஆனால் அவர் பத்திரிகையின் ஆசிரியராக இருந்திருக்கிறார். அவருடைய வாக்கியங்களில் இலக்கணம் இருக்காது. பெரியார் இறுதியாகச் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டக் காலத்தில் இரண்டு நாளுக்கு ஒரு அறிக்கை விட்டுக்கொண்டே இருக்கிறார். அவை அனைத்தும் கடுமையானதாகவும், தனித் தமிழ்நாடு கோரிக்கையை உள்ளடக்கியதாகவே இருந்தது. அப்போது பெரியாருக்கு வரும் கடிதங்களில் சில கடிதங்களைப் பிரித்துப் படித்துக்காட்டும் பணியைச் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அப்போது அண்ணாவின் திராவிட நாடு பத்திரிகையை எடுத்துட்டு வாங்க என்று பெரியார் சொன்னார். திராவிட நாடு குறித்து அண்ணா என்னென்ன எழுதியிருக்கிறார் என்று படியுங்கள் என்றார். அதை ஒரு முக்கால் மணிநேரம் படித்தேன். “நாட்டுப் பிரிவினைப் பற்றி எப்படி எழுதியிருக்கிறார் பாருங்க” என்று நெகிழ்ச்சியுடன் கூறினார். அவரது உணர்வு, சிந்தனை அனைத்தும் இறுதிகாலத்தில் தமிழ்நாடு விடுதலை என்ற நோக்கிலேயே இருந்தது. தனது உரையில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று பேசும் போது கூட, இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இதை வைத்தாவது நமது நாடு நமக்கானதாக ஆகிவிடாதா? என்ற காரணத்தினால் தான் சொல்கிறேன் என்று சொன்னார்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# தீபாவளி வாழ்த்து கிடையாது போயா!

கோடங்குடி மாரிமுத்து

**விஜயதசமி நாளில் இராவணன் படத்தைத் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள். இராவணன் எரிவதைப் பார்த்து கைத்தட்டி கும்மாளம் அடிக்கிறார்கள். இராவணன் மீது அம்புகள் ஏவப்படுகின்றன. தொலைக்காட்சிகள் இதை ஒளிபரப்புகின்றன. மோடியும், அதன் பரிவாரங்களும் மட்டுமல்ல, ராகுல், சோனியாவும் இதில் பங்கேற்கிறார்கள். ஏன் இந்த எரிப்புகள் நடக்கின்றன? தொலைக்காட்சியில் பார்த்த இருவர் இதுகுறித்து உரையாடுகிறார்கள். (விவாதம் தொடங்குகிறது)**

**கேள்வி :** *தசரா என்பது இந்துப் பண்டிகை. இதுல எதுக்கு இராவணனை எரிக்கனும்? இராமனைக் கொண்டாடனும்? இராமாயணக் காலத்துலயே இந்துமதம் வந்துடுச்சா?*

**பதில் :** *அப்படியெல்லாம் ஒன்னுமில்ல... இந்து என்ற பெயரே பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்துல தான் வந்துச்சு. ஆனால் பிராமணர் தெய்வம், அவர் பேச்சை மீறுவது குற்றம், மற்றவர்கள் சூத்திரர்கள், பிராமணர்களுக்கு அடிமை என்ற கருத்து இராமாயணக் காலத்துலேயே வந்துருச்சு. அதனால் தான் இராமன், சூத்திரன் சம்பூகனின் தலையை வெட்டி வீசினான். இந்துமதம் அப்போது வரல, ஆனால் வர்ணாசிரம தர்மம் வந்துருச்சு.*

**கேள்வி :** *இந்துமதம் இல்லாத காலத்தில் நடந்த இந்தக் கதையை எப்படி இந்து மதத்துல சேர்த்தாங்க?*

**பதில் :** *இந்தக் கேள்விக்கு ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் விஜயதசமி நாளில் பதில் கூறியிருக்கிறார். இந்துமதம் வருவதற்கு முன்பே நாம் வாழ்ந்து கொண்டிருந்தோம், அதுதான் இதற்கு பதில்.*

**கேள்வி :** *அப்போ ஒரு சந்தேகம்? இராமனும் இந்து, இராவணனும் இந்து தான். இராவணன் கிருஸ்துவனோ, இஸ்லாமியனோ அல்ல, இந்துவை ஒரு இந்து ஏன் எரிச்சு ஒழிக்கனும்?*

**பதில் :** *நல்ல கேள்வி, இந்துவுலேயே இரண்டு பிரிவு உண்டு. ஒன்று ஆரிய இந்து, மற்றொன்று திராவிட இந்து. ஆரிய இந்துவின் அதிகாரத்துக்கு திராவிட இந்து ஒழுங்கு மரியாதையா அடங்கிப் போகனும். எதிர்த்தால் எரிப்பார்கள், கடலில் மூழ்கிக் கொலை செய்வார்கள், தலையை வெட்டுவார்கள்.*

**கேள்வி :** *ஏன் திராவிட இந்துக்களின் மீது அவர்களுக்கு இவ்வளவு எரிச்சல்?*

**பதில் :** *அப்படிக் கேளுங்க! மக்கள் உணவுப் பொருட்களையும், கால்நடைகளையும் தீயில் போட்டு கடவுளுக்கு யாகம் நடத்துகிறோம் என்று ஆரிய இந்துக்கள் எரித்தார்கள். இந்தக் கொடுமையை எதிர்த்து திராவிட இந்துக்கள் கேள்வி கேட்டார்கள். எங்களுடைய யாகத்தை எதிர்க்கிறாயா? நீ இந்துவாக இருந்தாலும் உயிரோடு இருக்க முடியாது. விட மாட்டோம், பார் என்று திராவிட இந்துக்களை ஆரிய இந்துக்கள் ஒழிக்கச் சதி செய்தார்கள். இந்து காந்தியை இந்து கோட்சே ஏன் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றான்? இதே காரணத்துக்காகத்தான். இன்னும் இராவணனைத் தெய்வமாக வழிபடுகின்ற இந்துக்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் வாழ்ந்து வருகிறார்கள். பழங்குடியினர் இராவணனைத் தங்கள் தலைவனாக கருதுகிறார்கள். நேற்று கூட ஒரு செய்தி வந்திருக்கு.. உபியில் கான்பூர் சீவாலா என்ற ஊரில் இராவணன் கோயிலில் ஆயிரக்கணக்கான சிவ பக்தர்கள் திரண்டுவந்து வழிபாடு நடத்தியிருக்கிறார்கள். இவங்க உணர்வுகளை எல்லாம் காலில் போட்டு மிதித்து இராவணன் உருவத்தைத் தீயிட்டு எரிச்சா அவங்க மனம் புண்படாதா?*

**கேள்வி :** *ஆக, விஜயதசமி சக இந்துக்களை இழிவுபடுத்தும் பண்டிகை என்று கூறுகிறீர்களா?*

**பதில் :** அதில் என்ன சந்தேகம். விஜயதசமி மட்டுமல்ல, தீபாவளிக் கதையும் அப்படித்தான். நரகாசூரன் என்ற இந்து ஆரிய இந்துக்களின் தியாகங்களை கேள்விக் கேட்டான். உடனே ஆரிய இந்துவான விஷ்ணு பன்றி அவதாரம் எடுத்து சூழ்ச்சியாக நரகாசூரனைக் கடலுக்குள் தள்ளி கொலை செய்தான். இப்படித் திராவிட இந்துக்களை ஆரிய இந்துக்கள் கொலை செய்கிற பண்டிகை தான் தீபாவளியும், விஜயதசமியும்.

நரகாசூரனும் சரி, இராவணனும் சரி, மசூதிக்கோ சர்ச்சுக்கோ போகாதவர்கள். பாகிஸ்தானில் இருந்தோ, வங்கதேசத்தில் இருந்தோ வந்தவர்கள் அல்ல. ஆனால் நரகாசூரன் கொலை செய்யப்பட்ட நாளில் துக்கம் அனுசரிக்காதே, கண்ணீர் வடிக்காதே, பட்டாசு வெடித்து, புத்தாடை உடுத்தி இனிப்பு சாப்பிட்டு கோலாகலமாகக் கொண்டாடு என்று ஆரிய இந்து திராவிட இந்துக்களைக் கட்டாயப்படுத்துகிறது. இல்லாவிட்டால் இந்து விரோதி சூக்குரலிடுகிறது.

தீபாவளிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏன் வாழ்த்து கூறவில்லை என்று கேள்வி கேட்கிறது ஆரிய இந்து. எங்கள் திராவிட இந்துக்களைக் கொலை செய்யும் நாளுக்கு வாழ்த்துக்கூற வேண்டுமா? ரகு தாத்தா திரைப்படத்தில் கதாநாயகி கூறுகிற மொழியிலேயே கூறுகிறோம். *தீபாவளி வாழ்த்து கிடையாது போயா!*

---

3ஆம் பக்கத் தொடர்ச்சி

பல நேரங்களில் பெரியார் தனக்கு நேர்ந்த அடக்குமுறைகளைப் பற்றிப் பேசியதே கிடையாது. வைக்கம் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட பெரியாருக்கு திருவனந்தபுரம் சிறையில் கை மற்றும் கால்களில் விலங்கு, நிமிர்ந்து நின்றால் தலை இடிக்கும் அளவுக்கு மேல் சுவர் என இவற்றுடனே பல மாதங்கள் சிறையில் கழித்தார். ஆனால் ஒரு இடத்தில் கூட தனக்கு சிறையில் இப்படிப்பட்ட அடக்குமுறைகள் நேர்ந்தன என்று எழுதியதே கிடையாது.

ஆனால் வைக்கம் போராட்டம் பற்றி டி.கே.மாதவன் ஒரு வரலாறை எழுதியிருக்கிறார். அந்த வரலாற்றில் தான் பெரியார் இப்படிப்பட்ட அடக்குமுறைகளைச் சிறையில் சந்தித்தார் என்று எழுதியிருக்கிறார்.

கடைசியாகச் சிறைக்குப் போய் சில மாதங்கள் ஆகிவிட்டது. நான் ஏன் சிறைக்குப் போகாமல் சும்மா உட்கார்ந்து கொண்டு இருக்கிறேன் என்று தெரியவில்லை. இவ்வளவு நாளாகிவிட்டது, என்னை யாரும் கைது செய்யவில்லையே என்று கவலைப்பட்டவர் பெரியார். சிறைக்குச் சென்றால் தான் என்னுடைய கருத்து பரவும், அடக்குமுறைகளைச் சந்தித்தால் தான் என்னுடைய கருத்து பரவும் என்பதில் உறுதியாக இருந்த பெரியார், அடக்குமுறைகளைத் தனது கொள்கைப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தியவர். அதற்காகவே அடக்குமுறைகளை வரவேற்றார். தன்மானத்தை விட்டு சமூக மானத்துக்காகப் போராடியவர்.

நான் ஏன் உணர்ச்சியோடு இருக்கிறேன், என்னை நிலைகுலையாமல் வைத்திருப்பது எது? என்பதற்கு பெரியார் ஒரு விளக்கத்தைச் சொல்கிறார். அது எதிரிகளுக்கு ஸ்தாபனம் உண்டு, பொறுப்பு உண்டு, ஓட்டுக் கவலை உண்டு, பொதுமக்களிடம் கோடிக்கணக்கான பொருளைத் திரட்டுகிற தந்திரம் உண்டு. ஆனால் நமக்கு என்ன உண்டு? சகலமும் நாடே தான், என்ற ஆணவமும் அகம்பாவமும் கொண்டதால் தான் நான் இவ்வளவு காலம் உயிர் வாழ முடிகிறது.

எனக்கும் மற்றவர்கள் இருக்கிறார்கள், ஸ்தாபனங்கள் இருக்கிறது, கவலையும் பொறுப்பும் உள்ள தோழர்கள் இருக்கிறார்கள் என்று சிறிதாவது கருதியிருப்பேனானால் நான் உணர்ச்சியும் ஊக்கமும் குறைவுபட்டு தொட்டதில் எல்லாம் தோல்வியிலேயே தலைகாட்டிப் பொதுவாழ்வில் இருந்தே விலகிப் போயிருப்பேன் என்று பெரியார் சொன்னார்.

*27.11.1938*-இல் நடந்த பெண்கள் மாநாடு இந்தி எதிர்ப்புப் போராட்டக் களம். அப்போது நிறையப் பெண்கள் போராட்டக் களத்திற்கு வந்தனர். ஆனால் ஆண்களெல்லாம் போராட்டத்திற்கே போகாதே என்று தடுத்தனர். இந்த நிலையில் தான் பெரியார் ஒன்றைச் சொல்கிறார்.

பெண்களாகிய நமக்கு ஏற்படும் வேதனைக்கோ தொல்லைக்கோ எல்லையில்லை. இந்நிலையில் நீங்கள் சொல்வதைக் கேட்காது, நாட்டிற்குப் பாடுபடாது, ஆண்கள் உங்களுக்கு எதிராக வருவார்களே, ஆனால் ரோசம் இருக்கும் இடத்தைப் பார்த்து அவர்களைக் குத்த வேண்டும். வீட்டிற்குள்ளே அனுமதிக்கக் கூடாது. கதவை மூடிவிட வேண்டும். இதே போல் பல நாடுகளில் பெண்கள் கணவன்களை இடித்துத் திருத்தியதாகச் சரித்திரம் கூறுகிறது. அநேக ஆண்கள் நீங்கள் சிறைக்குப் போவதைக் கண்டு பயப்படுவார்களேயானால், அவர்களைத் திருத்தவேண்டுமேயானால் நீங்கள் எதாவது ஒரு ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டு அவர்களுக்குத் தெரியாமலேயே சிறைக்குப் போய்விடுங்கள். அப்படிச் செய்தால் தான் அவர்களும் உங்களைப் பின்தொடர்ந்து வருவார்கள் என்று பெரியார் *1938* பெண்கள் மாநாட்டில் பேசியிருக்கிறார்.

தன்னையும் தன்னுடைய புகழையும் மறைத்து மக்களால் வெறுக்கக் கூடியக் கருத்துகளைத் துணிச்சலாக மக்களிடம் முன்னெடுத்துச் சென்றிருக்கிறார் என்பதில் தான் பெரியார் நிற்கிறார்.

குடிஅரசு நூற்றாண்டில் அதன் வரலாறுகளை நாம் கொண்டு சேர்ப்போம்! சமகாலத்தில் பெரியாரியலை வழிகாட்டும் ஒளி விளக்குகளாக அவை அமையும்!

**(நிறைவு)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 18, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran